மாதர் போதினி

No. 242 — பெப்ருவரி 1918 — No. 2

PRAYER BRINGS VICTORY

ஜெபமே ஜெயம்

ஜெபமே ஜெயம் என்ற வாசகத்தை அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். நமது வீட்டுச்சுவர்களில் தொங்கவைத்துப் பார்த்து வருகிறோம். இது நமது அநுபோகமா? ஜெபத்தினாலே நாம் கொண்ட ஜெயம் எத்தனை? ஓர் மாது தன் இல்லற ஜீவியத்திலும் மற்ற ஜீவியத்திலும் இவ்வார்த்தைகளின் உண்மையைக் காணவேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தின் இரகசியமும் ஜெபமே.

ஜெபமென்றால் வெறும் வார்த்தைகள் மாத்திரமல்ல, வார்த்தைகளில்லாமலும் ஜெபஞ்செய்யலாம். இருதயத்திலிருந்து வரும் வார்த்தையானாலும் விருப்பமானாலும் ஜெபமாகும். ஜெபமென்றால் வேண்டுகோள் மாத்திரமல்ல, தேவனோடு நெருங்கி ஐக்கியமாகத் தக்க தியானமும், துதி தோத்திரமும், விண்ணப்பமும் ஜெபமாகும்.

நாம் எப்படி ஜெபிக்கவேண்டுமென்று நமது அருமை இரட்சகர் தமது ஜீவியத்தாலும் போதனையாலும் காட்டியிருக்கிறார். இயேசுவானவர் தனித்து மலையின்மேலும், வனாந்தரத்திலும், சீஷர் முன்பாகவும், ஜனங்கள் முன்பாகவும் ஜெபித்ததாலும், அறைவீட்டுக்குள் பிரவேசித்துக் கதவைப்பூட்டி ஜெபிக்கவேண்டுமென்றும், இரண்டு மூன்றுபேர் என் நாமத்தினால் கூடியிருந்தால் அவர்கள் நடுவிலிருக்கிறேனென்றும் போதித்ததினாலும், மனுஷர் பாராத இடத்தில் தனித்து அதிகமாய் ஜெபிக்கவேண்டுமென்றும், பிறரோடு சேர்ந்து கூட்டங்களில் ஜெபிக்கவேண்டுமென்றும் ஜெபிக்கவேண்டிய இடத்தைப்பற்றி நமது இரட்சகரிடம் கற்றுக்கொள்ளுகிறோம்.

இயேசுவானவர், அதிகாலையில் இருட்டோடு எழுந்து ஜெபித்ததாலும், இராமுழுவதும் ஜெபித்ததாலும், தமது ஊழியத்தைத் துவக்குமுன் ஞானஸ்நானம் பெற்றவுடன் ஜெபித்ததாலும், சீஷ

ரைத் தெரிந்துகொள்ளுமுன்னும், ஐயாயிரம் பேரைப் போஷிக்குமுன்னும், லாசருவை எழுப்புமுன்னும், பிணியாளிகளைக் குணமாக்குமுன்னும், குணமாக்கினபின்பும், கெத்சமெனேயிலும் சிலுவையிலும் ஜெபித்ததாலும், நாம் விசேஷமாய் ஜெபிக்கவேண்டிய நேரத்தையும் சமயத்தையும்பற்றி நமக்குப் போதிக்கிறார்.

நமது ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் அவசியமான சகல நன்மைகளுக்காகவும் வேண்டிக்கொள்ளலாமென்றும், தாம் சீஷருக்குக் கற்றுக்கொடுத்த மாதிரி ஜெபத்திலும் வேண்டிக்கொள்ளுகிறவைகளைப் பரமபிதா கொடுப்பாரென்றும், கேளுங்கள் கொடுக்கப்படுமென்றும், என் நாமத்தினால் பிதாவைக் கேட்கிற எதுவும் கிடைக்குமென்றும் நமது அருமை இரட்சகர் கற்பிக்கிறார்.

நம்மைத் தாழ்த்திப் பாவ உணர்ச்சியோடு ஜெபிக்கவேண்டுமென்று பரிசேயன் ஆயக்காரன் உவமையாலும், பிறர் நமக்கு விரோதமாய்ச் செய்த குற்றங்களை மன்னித்துப் பின் ஜெபிக்கவேண்டுமென்று கர்த்தருடைய ஜெபத்தாலும் போதனையாலும், விசுவாசத்தோடு ஜெபிக்கவேண்டுமென்று அத்திமரம் பட்டுப்போனதிலிருந்தும், சோர்ந்துபோகாமல் ஜெபிக்கவேண்டுமென்று அநீதியுள்ள நியாயாதிபதி உவமையாலும், இன்னும் ஒருமனப்பட்டும் விழிப்போடும் ஜெபிக்கவேண்டுமென்றும் நமது ஆண்டவரிடம் படிக்கிறோம்.

ஜெபிக்க உற்சாகமும் வாஞ்சையும் குறைந்தவுடன் நமது ஜீவியம் தளர்ந்து நமது பிரயாசையும் வேலையும் பலனற்றதாகுமென்ற சத்தியத்தை மறக்கலாகாது. நம் இரட்சகரிடம் கற்றுக்கொண்ட சரியான முறைப்படி ஜெபித்துவருவோமானால், பரிசுத்தாவியின் வல்லமையைப் பெற்று உன்னத ஜீவியஞ்செய்து, வீட்டிலும் வெளியிலும், நமக்கும் பிறருக்கும் ஆசீர்வாதமாயிருப்போம். நாம் செய்யும் ஊழியத்திலும் பலன் காணப்படும்.

SALVATION

இரட்சிப்பு

இராகம், செஞ்சுருட்டி. பிலந்தி தாளம்.

பல்லவி

ஜீவநாயகர் பாவந்தீர்க்க
ஆவலாயுன்னை அழைக்கிறார்—பாவி.

அநுபல்லவி

பாவம் போக்க உன் பரம இரட்சகர்
பரிவாய் ஜீவன் ஈந்தார்—பாவி.

சரணங்கள்

1. பாவஞ் சுமந்து பரிதபிக்கும்
பாவிகளே கேளும்—பாவ
பாரத்தை நீக்கி பாக்யங் கொடுக்கும்
பரமன் பதத்தைச் சேரும்—பாவி.

2. சிலுவை மரத்தில் சிறுமை யடைந்து
பழுவைப் பாவப் பாரத்தை—பரன்
பட்சமாகவே உத்தரித்தனர்
முக்தியி லுன்னைச் சேர்க்க—பாவி.

3. உலக மாய்கையில் உல்லாசமாய்
உள்ளங் களிக்கும் பேதாய்—இந்த
உலகமு மதிஞசா பாசமும்
ஒருபோதும் நிலையாதே—பாவி.

THE WAR

யுத்தம்

சகல பத்திரிகைகளிலும், எந்த மனுஷர் வாயிலும் யுத்த செய்தியைக் கேட்கிறோம். எப்போது யுத்தம் முடியுமென்ற கேள்வியும் எல்லாருடைய மனத்திலும் வாயிலுமிருக்கிறது.

மகா பெரிய யுத்தம் நடக்கிறது. இதில் உலகத்திலுள்ள ஐந்து கண்டங்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இந்த யுத்தத்திற்காக இந்திய மாதரின் கடமையென்ன?

1. யுத்தத்திற்காக தினந்தோறும் ஊக்கமாய் ஜெபிக்கிறாயா?

2. உன்னாலியன்ற கைத்தொழிலாவது பண உதவியாவது செய்கிறாயா?

3. இந்த யுத்தத்தின் மூலமாய் தேவன் உனக்கு என்ன போதிக்கிறாரென்று அமர்ந்து தியானிக்கிறாயா?

CHILDREN'S PAGE

பாலர் பக்கம்

தென் இந்திய ரெயில்வே மார்க்கமாயுள்ள கொடைக்கானல் ரோடு ஸ்டேஷனுக்குக் கீழ்பாரிசத்தில் சிறுமலைகள் என்ற ஒரு அழகிய மலைச்சாரலுண்டு. அந்த மலையில் அதிக ருசியுள்ள வாழைப்பழம் கிடைக்கும். ஏராளமான வாழைமரங்கள் உண்டு. ரெயில்வண்டியிற் பிரயாணம்பண்ணும்போதெல்லாம் அந்த மலைப்பழம் விற்கிறதைப் பார்க்கலாம். இவ்வழகிய மலையினடிவாரத்தில் சிறுமணவூர் என்ற ஒரு குக்கிராமமுண்டு. அங்கே ஒரு மிஷன் பாடசாலையுமுண்டு. ஒரு விடுமுறைநாளில் அந்தப்பள்ளிக்கூடத்தில் படித்த வேணுகோபாலன், பாலகிருஷ்ணன் என்ற இரண்டு சிறுவர்களும், அதிகாலையிலெழுந்து காலை போஜனமுண்டு விளையாடிக்கொண்டே மலைக்குப்பக்கத்தில் வந்தனர். மேலே பார்க்கப் பார்க்க அவர்களுக்கு அதிக ஆனந்தமாயிருந்தது. மேலே ஏறிப்போனவுடனே வாழைமரங்கள் மாத்திரமல்ல, இன்னும் அநேகவகை மரங்கள் இருந்ததையும் கண்டு சந்

தோஷம் அடைந்தனர். ஆனால் இவர்கள் மலையிலுள்ள ஒரு செடியையாவது தொடவேயில்லை. அப்பொழுது அந்தப்பக்கமாய் மரங்களின் சொந்தக்காரர்களில் ஒருவன் வந்தான். அவன் அவர்களைக் கண்டு இவர்கள் எங்கே பழங்களைத் திருடிவிட்டார்களோவென்று கோபங்கொண்டு அவர்களைத் தண்டிக்கவேண்டுமென்றெண்ணி அதி வேகமாய் அவர்களிடம் ஏகினான். ஆனால் சமீபத்தில் வந்து அவர்கள் முகத்தைப் பார்த்ததும் அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்று கண்டு அவர்களை உவந்து, பிறகு இரண்டு சீப்புப் பழங்களைக் கொண்டுவந்து, 'தம்பிமார்களே, நீங்கள் இதைத் தின்று பசியாறுங்கள்' என்று சொன்னான். சாப்பிடும்போதே வேணு தோட்டக்காரனைப் பார்த்து, 'ஐயா, வாழைமரத்தைப்பற்றி நாங்கள் பள்ளிக்கூடத்திலே படித்துவந்திருக்கிறோம். அது ஒற்றைப்பருப்புள்ள மரம்; உள்ளிருந்தே குருத்துவிட்டு வரும்; மனிதருக்கு அதிகமாய் உபயோகப்படுகிற மரம். வாழைமரத்தின் ஒவ்வொரு பாகமும் உபயோகப்படும்' என்று சொன்னான். அப்போது கிருஷ்ணன், 'ஆம், வாழைப்பூவைப்பற்றி ஒரு விடுகதை படித்தோமல்லவா?' என்று வேணுவிடம் சொன்னான். தோட்டக்காரன், 'எங்கே அதைச் சொல்லுங்கள்' என்று கேட்டான். 'பட்டையைப் பட்டையை நீக்கிப் பதினாறு பட்டையை நீக்கி முத்துப் பட்டையை நீக்கி முன்னே வந்தான் கோவிந்தன்' என்று கிருஷ்ணன் சொன்னான். உடனே ஒரு பூவை ஒடித்துவந்து அதைப் பிரித்துப் பார்த்தார்கள். உண்மையைக்கண்டு தோட்டக்காரன் சிறுவர்களின் புத்தியை அதிகமாய் மெச்சினான். உடனே வேணு, 'இன்னொரு காரியம் எனக்கு ஞாபகமாயிருக்கிறது. நாம் இப்படிப்பட்ட மரங்களைப் பார்க்கும்போது கடவுள் உலகத்தை அழகுபடுத்தவும் மனிதருக்கு உபயோகமாகவும் உண்டாக்கினாரென்பதையும் மறக்கக்கூடாதென்று உபாத்தியாயர் சொன்னாரல்லவா!' என்று சொன்னான். உடனே இச்சிறுவர்கள் கடவுளை வணங்கி நின்றார்கள். இவர்கள் புத்தியையும் பத்தியையும் கண்ட தோட்டக்காரன் இவர்களை அதிகமாய் வியந்து ஆளுக்கொரு பூவும் ஒருசீப்புப் பழமும் கொடுத்தனுப்பினதுமன்றி, தன் மகனையும் அடுத்தநாள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினான். நடந்ததை யறிந்த பெற்றோரும் உபாத்தியாயரும் பிள்ளைகளின் புத்தி தீட்சணியத்தை அதிகமாய் மெச்சினர்.

சிறுவர்களே! 'சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்' என்ற முதுமொழியை மறக்கவேண்டாம். எப்பொழுதும் சத்தியம் பேசவேண்டும். தாம் கற்றுக்கொண்டதைத் தக்க சமயத்தில் உபயோகிக்க வேண்டும். கடவுளை எப்பொழுதும் நினைக்கவேண்டும்,

BIBLE PUZZLES FOR CHILDREN

வேத விடுகதைகள்

1. என் பெயர் ஜெப சம்பந்தமாய்க் கூறப்பட்டுள்ளது. என் முதல் இரண்டெழுத்தும் ஓர் தீவின் பெயர், கடைசி இரண்டும் ஓர் கூராயுதத்தைக் குறிக்கும். நான் யார்?

2. நான் ஓர் முற்பிதா. என் பெயரின் முற்பாகம் பறக்கிற ஓர் ஜந்து, பிற்பாகம் ஓர் பெரிய பை. நான் யார்?

3. (1) 'சேர்ந்துகொள்ளுமுன் நினை.' (2) 'தான் வெட்டின குழியில் தானே விழுவான்.' யார் சம்பந்தமாய்க் கூறலாம்?

A HEROIC PIPER

குழல் ஊதுகிறவனாகிய ஒரு சுவாவ் ஜாதியானுடைய கடைசி அழைப்பு

பிரான்ஸ் தேசத்திலுள்ள வெர்டன் பட்டணத்திற்கு அருகில் ஜெர்மனியருக்கும் பிராஞ்சுக்காரருக்கும் சண்டை நடந்தது. பிராஞ்சுக்காரர்கள் தங்களுடைய பட்டணத்தைப் பாதுகாக்கும்படி அவ்விடத்தில் நீண்ட பள்ளங்களை வெட்டி, தோண்டி யெடுக்கப்பட்ட மண்ணை பெரிய அணையாக ஒரு பக்கத்தில் குவித்து மணல் மூட்டைகளை அடுக்கி, இடையில் பீரங்கிகளை நிறுத்திவைத்தார்கள். அப்படி வெட்டப்பட்ட பள்ளங்களுக்கு அகழிகள் என்று பெயர். ஜெர்மனியர் தங்களுடைய பட்டத்து இளவரசன்கீழ் பிராஞ்சுக்காரருடைய இடத்தைப் பலமாக வந்து தாக்கினார்கள். அந்தத் தாக்கலைவிட பயங்கரமானது இதுவரையில் சம்பவித்ததில்லையென்றே நாம் சொல்லவேண்டும். அந்தச் சண்டை 1916-ம் வருஷம் பெப்ருவரி மாதம் முதற்கொண்டு அக்டோபர் மாதம் வரையில் நடந்துவந்தது. வெர்டனைப் பாதுகாத்துவந்த அகழிகளை அழிக்கும்படி ஜெர்மனியர் ஏறக்குறைய இரண்டாயிரம் பீரங்கிகளை ஓரிடத்தில் நிறுத்திவைத்தார்கள். மேலும் தங்களுடைய வரவை தைரியத்துடன் எதிர்பார்த்திருந்த பிராஞ்சுசேனைகளைத் தோற்கடித்துச் சிதறடிக்க பதினாயிரக்கணக்கான தங்களுடைய தேர்ந்த வீரர்களை அவர்கள் படைபடையாக அனுப்பினார்கள். ஆனால் தாங்கள் அந்த தைரியமுள்ள பிராஞ்சுக்காரரை ஜெயிக்கமுடியாதென்றும் வருஷமுடிவில் தாங்களே தோல்வியடையவேண்டுமென்றும் தெரிந்துகொள்ள அவர்களுக்குப் பல வாரங்கள் பிடித்தன.

வெர்டன் சண்டையில் ஜெர்மனியரை எதிர்த்துநின்ற பிரஞ்சு சேனைகள் பலவற்றில் சுவாவே என்பவர்களும் இருந்தார்கள். சுவாவே என்பவர்கள் ஆதியில் வட ஆபிரிக்காவில் அல்ஜீரியா நாட்டிலுள்ள கபிலஸ் என்னும் ஜாதியைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார். ஆனால் 1840-ம் வருஷம் முதற்கொண்டு சுவாவே என்பவர்கள் பிரஞ்சுசேனையில் சேர்க்கப்பட்டுவந்தார்கள். மேலும் ஆபிரிக்கா தேசத்தார் 'டிரெயிலர்' என்று சொல்லப்படும் அல்ஜீரியா துப்பாக்கிப் படையில் தாக்கல்செய்யப்பட்டார்கள். 1914-ம் வருஷம் யுத்தம் ஆரம்பித்ததற்குமுன் சுவாவே என்பவர்கள் ஏறக்குறைய பதினாயிரம் பேர் இருந்தார்கள். அவர்கள் மற்ற பிரஞ்சுப்படைகளில் அதிக அனுபவமுள்ளவர்களான வீரர்களிலிருந்து எடுக்கப்பட்டவர்களான படியால் பராக்கிரமமுள்ளவர்களும், நன்றாய்ப் பழக்கப்பட்டவர்களும், மிகுந்த மனோதைரியமுடையவர்களுமாய் இருக்கின்றார்கள். விரோதிகளால் கெடுதி உண்டாகக்கூடிய இடங்களில் இருப்பதும், பிரஞ்சு புறதேசசேனையிலுள்ள தங்களுடைய தோழரைப்போல் பிரஞ்சு தேசத்திற்காகப் பிரயாசைப்படுவதும், உபத்திரவங்களைச் சகிப்பதும் தங்களுக்கு மேலான சிலாக்கியமாக அவர்கள் எண்ணுகின்றார்கள். ஆகையால் சண்டைநடந்தபோது வெர்டன் பட்டணத்தைச்சுற்றிலுமுள்ள அகழிகளின் முதல் வரிசையில் அவர்கள் இருந்திருக்க வேண்டுமென்று நீங்களே தெரிந்துகொள்ளலாம். பின்வரும் சம்பவம் ஒன்று அவர்களுடைய தைரியத்தைக் காண்பிக்கும் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

1916-ம் வருஷம் பெப்ருவரி மாதம் ஜெர்மனியர் வெர்டனிலுள்ள பிரஞ்சுக்காரருடைய அகழிகளைத் தாக்கத்துவக்கினதற்குக் கொஞ்ச காலத்திற்குப்பின்புதான் அந்தச் சம்பவம் நடந்தது. பீரங்கிக்குண்டுகள் புசல்காற்றைப்போல் ஏராளமாகவும் பலமாகவும் கிளம்பி பிரஞ்சுக்காரரை சுற்றிலும் மூடிக்கொண்டன. ஒரு அகழி மாத்திரம் சுவாவே என்பவர்கள் மட்டும் இருந்தது. அவர்களில் அநேகர் காயப்பட்டார்கள், அநேகர் இறந்துபோனார்கள். பின்பு மற்றொரு சோதனையும் வந்தது. காற்று ஜெர்மனியரிடமிருந்து பிரஞ்சுக்காரர் இருந்த இடத்திற்கு அடித்தது. பீரங்கிக்குண்டுகளை ஏராளமாய் வெடித்ததுமல்லாமல் ஜெர்மனியர் 'க்லோரைன்' என்று சொல்லப்படும் ஒருவித மருந்துபுகையை உண்டாக்கி, அப்புகை காற்றோடு கலந்து பிரஞ்சுக்காரர் இருந்த இடத்திற்கு நேராக வீசும்படி விட்டார்கள். அது 6 அல்லது 7 அடி உயரம் வரையில் ஆகாயத்தில் பரவியிருக்கும். அது மஞ்சள் கலந்த பச்சை நிறமுள்ளது. அது சுத்த ஆகாயத்தை விஷமாக்கிவிடும். அந்த விஷக்காற்றை சுவாசிக்கிறவர்கள் திக்கு

மூக்காடி கொஞ்சநேரத்திற்குள் சாகவேண்டியதே. ஜெர்மனியர் உண்டாக்கின அந்த விஷக்காற்று சுவாவே என்பவர்கள் வசத்திலிருந்த அகழிக்கு நேராக வீசியது. தங்கள் தலைவரின் உத்தரவிற்குக் காத்திருக்கவேண்டியதில்லை யென்று கண்டு சுவாவே என்பவர்கள் மரணத்தை யுண்டாக்கக்கூடிய அந்தக் காற்றை உட்கொள்ளாதபடி தங்களுடைய முகத்தை ஒருவிதமான மூடியினால் மூடிக்கொண்டார்கள். சேனைத்தலைவரோ சுற்றிலுமுள்ள தமது சேனைவீரர்களை எண்ண முயன்றார். ஜெர்மனியர் தம்முடைய அகழியைக் கைப்பற்றாதபடி அவர்களைத் தடுக்க தம்முடைய சேனைபலம் போதாதென்பது அவருடைய தேர்ந்த கண்களுக்குத் தென்பட்டது. ஏனென்றால் ஜெர்மனியருடைய தொகை அதிகமாயிருந்தது. அவர்கள் முதல் தடவையிலேயே மீதியாயுள்ள சுவாவே என்பவர்களைத் தாக்கி நாசம் செய்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் ஜெர்மனியருடைய வரவைத் தடுப்பதற்கு வேறொரு சேனையின் உதவிவேண்டும். தாங்கள் அழிந்துவிடுவார்கள் என்ற பயத்தினாலல்ல, பிரஞ்சுக்காரருடைய இடத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற கவலையினால் பின்புறத்திலுள்ள சேனையின் உதவியை சுவாவே என்பவர்கள் தேடினார்கள்.

பின்புறத்தில் பிரத்தியேகமாய் வைக்கப்பட்டுள்ள சேனையை அழைப்பது எவ்விதம்? முன்வரிசையிலுள்ள அகழிக்கும் பின்புறத்திலுள்ள அந்தச் சேனைக்கும் நடுவிலிருந்த செய்திதெரிவிக்கும் யந்திரத்தின் கம்பிகள் ஜெர்மனியருடைய குண்டுகளால் துண்டு துண்டாகத் தெறிபட்டன. முதல் வரிசை அகழியிலிருந்து பின்புறத்திலுள்ள சேனைக்குச் சமாச்சாரம் கொண்டுபோவது எவனுக்கும் கூடாதகாரியமாக இருந்தது. ஏனென்றால் பகைவருடைய பீரங்கிக்குண்டுகள் எங்கும் பறந்தன. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவதற்கு ஏற்பட்டிருந்த அகழிகள் அடைக்கப்பட்டன. செய்தி கொண்டுபோவதற்கு ஒரு தூதுவனை அனுப்பினால் அவன் வழியில் இறந்தேபோவான். ஆதலால் ஒரு தூதுவனை அனுப்புவது சேனைக்குச் சமாச்சாரம் சேருவதைத் தடுப்பதுபோலாகும்.

பிரத்தியேகமான சேனையை அழைப்பதற்கு ஒரேவழி மாத்திரம் இருந்தது. அதாவது ஒரு சேனையிலிருந்து மற்றொரு சேனைக்கு சமாச்சாரம் தெரிவிக்கும்படி குழலூதுகிறவன் யுத்தகளத்தில் சிறிதுநேரம் சந்தடியில்லாதிருக்கும்போது அந்த சேனையை அழைக்க தன் குழலை ஊதவேண்டும். ஆனால் சேனையை அழைப்பதற்குக் குழல் ஊதவேண்டுமென்றால் குழல் ஊதுபவன் நிச்சயமாய் இறக்க வேண்டும். ஏனென்றால் அவன் குழலைத் தன் வாயில் வைத்து ஊதுவதற்குத் தன் முகமூடியை எடுக்கவேண்டுமல்லவா? அப்படி விலக்

கும்போது விஷக்காற்று குழலின்வழிய தால்வளைக்குட்புகுந்து
அவனைத் திக்குமுக்காடச் செய்யும் ப் பார்த்தார். சாவு சாதா
சேனைத்தலைவர் குழலூதுகிற தோழனை விஷக்காற்றினால்
ரணமாயுள்ள அகழிகளிலுங்கூட ரியமாகத் தோன்றிற்று. ஆனால்
சாகச்சொல்வது பயங்கரமான தலைவரின் கட்டளைக்காகக் காத்திருக்க
குழலூதுகிறவனோ சே பில் எடுத்தான். பின்புறத்திலுள்ள பிரத்
வில்லை. குழலைத் தன் ளவர்களுக்கு குழலின் சத்தம் நன்றாய்க்கேட்
தியேகமான சேனையி இடத்திற்கு விரைந்தோடினான். யுத்தகளத்
கும்படி செய்யக்கூ ணடாவதற்காக சிறிதுநேரம் தாமதித்திருந்தான்.
தில் அமைதி ரியருடைய பீரங்கிகள் அமைதலாயிருந்தபோது தன்
பின்பு ஜெர் த முகமூடியைப் பிடுங்கியெறிந்தான். உடனே வாயில்
முகத்திலி லை வைத்துப் பின்புறத்திலுள்ள சேனையை உதவிக்கு வா
தன் ங்க மகாசத்தமாக ஊதினான். ஊதிமுடிந்ததும் விஷக்காற்று
வ பின்வழியாய் உள்ளேசென்று அவனைத் திக்குமுக்காட வைத்தது.
துள்ளித் துடித்துத் தரையில் விழுந்து பார்த்தோர் மனம் பதைக்க பூமியின்மேல் புரண்டு உருண்டு வேதனையோடு இறந்துபோனான்.

ஆனால் அவன் சத்தம் கேட்கப்பட்டது. பிரத்தியேகமான சேனை உதவிசெய்ய விரைந்தோடி வந்தது. ஜெர்மனியர் துரத்தியடிக்கப்பட்டார்கள். சுவாவே என்பவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். சேனையை அழைப்பதற்கு விஷக்காற்றில் குழல் ஊதி தன் உயிரைக் கொடுத்த அந்த வீரனோ வீணாக இறக்கவில்லை.

S. A. Das.

THE SHADOWS WE CAST

நாம் பதிக்கும் நிழல்

நாம் எங்கே போனாலும் நமது நிழல் நம்மை விட்டகலாமற் கூடச்செல்வதுபோல நம்மைச்சூழ்ந்து எப்போதும் ஒரு பிரதிவிம்பம் கூடச்செல்லுகிறதாயிருக்கிறது. அப்பிரதிவிம்பம் எம்மாதிரியான தென்று விஸ்தரிப்பது பிரயாசம். மற்றவர்களை ஆகர்ஷிக்கிறதான அந்த நிழலுக்கு, வசப்படுத்தும் சக்தி அல்லது செல்வாக்கு என்று ஓர்விதப் பெயரிடலாம். நாம் போகிற இடம் எல்லாம் அது செல்லுகிறது. அதை நாம் விரும்பும்போது வைத்துக்கொள்ளுகிறதும், விருப்பமில்லாதபோது ஒரு சட்டையைப்போல கழற்றிவிடக்கூடியதுமல்ல. அது விளக்கில் பிரகாசம் சேர்ந்திருப்பதுபோலும்,

சுடரில் கார்தியிரு
போலும் நமது ஜீவிய போலும், புஷ்பத்தில் மணம் இருப்பது
சார்ந்துகொண்டிருக்கின்றது.

எலிகூ பறிற்று (Elih rritt) என்பவர், 'செல்வாக்குப் பிறப்பியாமல் மனிதர் உலகில் க ழிப்பது கூடாதகாரியம். உலகத்தில் உண்டாகிற ஒவ்வொரு ம ஜென்மமும், பூலோகத்தில் ஒன்றில் சந்தோஷம் கொடுக்கிறதா துன்பம் கொடுக்கிறதாயோ இருக்கும். அது தற்போது மட்டுமல்ல, ஷஜாதி இருக்கும் வரையும் அப்படியே இருக்கக்கூடியது. இவ்வித யினின்று ஒருவராவது தன்னை விடுவித்துக்கொள்வது கூடாதகாரிய மற்ற மனுஷரோடு சம்பாஷித்து ஜீவியாமல், அல்லது உலகத்தில் மை தீமை நியமம் அனுசரியாமல், ஒதுங்கியிருக்கக் கூடியதான ஏகாந் தலமோ, சூனியமண்டலத்தில் ஒரு இருளான மூலையோ இல்லவே லை. எங்கே இருந்தாலும் அவனுடைய சமூகமும், இல்லாமையும் கவ கப்படும். எவ்விடத்திலும் அவனை அடுத்தவர்கள் ஒன்றில் சந்தோ அல்லது துக்கத்தை அடையக்கூடியதாயிருக்கும்' என்று எழுதிய க்கிறார். இவை சத்தியமான வார்த்தைகள். ஜீவித்திருப்பதினால் ஒரு ஆ மற்றவர்களுக்கு நன்மையையோ தீமையையோ பிறப்பிக்கிறான்.

மற்றவர்களை வசப்படுத்துகிறதான செய்கை மிகவும் ஆச்சரியமான ஊழியம். நம்மை அறியாமல் நம்மிலிருந்து போகிறதான இந்தச் சக்தியால் நாம் மற்றவர்கள் கவனத்தை இழுக்கிறோம். மற்றவர்கள் நம்மைப் பார்த்து தங்கள் கிரியைகளையும் பேதப்படுத்துகிறார்கள் மற்றவர்களிடத்தில் விளங்கின ஒரு உத்தமசெய்கையைக் கவனித்து தங்கள் ஜீவியத்தைப் பாக்கியமும் ஆசீர்வாதமுமானபடி தொடங்கிக் கொண்டவர்களும் உண்டு. சீஷர்கள் தங்கள் எஜமான் ஜெபம் செய்கிறதைக் கண்டார்கள். பிதாவோடு அவர் உறவாடும் அந்த வேளையில் அவரில் விளங்கின தாபந்தத்தையும் அவர் முகத்தில் ஜொலித்த பிரகாசத்தையும் கவனிக்கவே, அவர் ஜெபித்துவிட்டுவந்தபின் தாங்களும் அவரிடத்தில் ஜெபம் கற்பிக்கக் கேட்டுக்கொண்டார்கள். மற்றவர்களிடத்தில் விளங்கும் அன்பு, பரிசுத்தம், மாட்சிமை இவைகளைக் கவனிக்கிற தப்புரவுள்ள எந்த ஆத்துமாவும் அதனால் இழுக்கப்படுகிறது.

அன்பான ஒரு செய்கை அப்பேர்ப்பட்ட அநேக செய்கைகளை மற்றவர்களிடத்தில் கிளப்பிவிடுகிறது. ஒரு வர்த்தமானப் பத்திரிகையில் கண்ட பின்வரும் சங்கதி அதை திருஷ்டாந்தப்படுத்துகிறது. ஒரு தடவை சமாசாரப்பத்திரிகை கொண்டு திரிகிறவனான ஒரு சிறுவன் ஒரு புகைவண்டியில் பிரவேசித்து குறுக்கே போடப்பட்டிருந்ததான ஒரு ஆசனத்தில் திடீரென்று படுத்து உறங்கிவிட்டான்.

அப்போது இரண்டு வாலிபதுரைசானிகள் உட்பிரவேசித்து சிறுவன் படுத்திருந்த ஆசனத்துக்கு எதிராக உட்கார்ந்தார்கள். பையனின் காலில் சப்பாத்து இல்லை. உடுப்புகள் கிழிந்து துன்னிப்போயிருந்தன. பசியினாலும் தரித்திரத்தினாலும் முகம் மெலிந்து சுருக்கு விழுந்திருந்தது. வாலிப துரைசானிகள் இவனுடைய நிலைமையைக் கூர்ந்து கவனித்து, அவனுடைய கன்னம் வண்டியின் ஜன்னல் சட்டத்தில் தாங்கியிருப்பதையும் கவனித்து, ஒரு அம்மாள் தன் கையில் போட்டிருந்த ரோமத்தால் செய்த உறையை உருவி தலையை மெள்ள உயர்த்தி தலையணைபோல வைத்தாள். இதைப் பிரயாணிகள் கவனித்துக்கொண்டிருந்தார்கள். நடந்ததென்னவென்றால், அடுத்த ஆசனத்தில் இருந்த வயோதிக துரை ஒருவர் ஒரு கால் ஷில்லிங் துரைசானியிடம் ஏட்பித்து பையனுக்குக் கொடுக்க சைகை காண்பித்தார். அவள் அதை இருமனதோடு கைப்பற்றி பையனிடம் கொடுக்கவே இன்னொருவர் இன்னொரு நாணயத்தை அவளிடத்தில் ஏட்பித்தார். அப்பாலிருந்த ஒரு துரைசானியும் சில நாணயங்களை உடன் நீட்டிக்கொடுத்தாள். அப்படியே வாலிபத் துரைசானியின் செய்கை முற்றுப்பெறுமுன் பையனுக்கு ஒரு தொகை பணம் சேகரமாயிற்று. இவ்வண்ணமாய் ஒரு அற்ப ஊழியத்திலிருந்து உண்டான பிரதிவிம்பமானது 40 பேருடைய இருதயத்தைக் கருஷித்து ஒவ்வொருவரும் சிறிது சிறிது நன்மை செய்ய ஏவிவிட்டதல்லவா?

சாதாரண ஜீவியத்தில் பட்சமான செய்கையினால் உண்டாகிற இவ்வித பலாபலன்களை அங்கங்கே அதிகமாய்க் காணலாம். உத்தம ஜீவியம் செய்வதினால் இரண்டுவிதமான பலன்கள் விளைகின்றன: நன்மையான செய்கையால் விளைகிற பலன் ஒன்று, மற்றவர்கள் அதைக் கவனித்து தாங்களும் அவ்விதமாய் மற்றவர்களின் நன்மையைக் கருதி ஜீவிக்க ஏவப்படுதலால் விளையும் பலன் இன்னொன்று.

செல்வாக்கு ஒரு ஆளின் மரணத்தோடும் தொலைந்துபோகிறதல்ல. பூலோக ஜீவியத்தின் இறுதியில் ஒரு உத்தமமனிதனின் சுறுசுறுப்பான ஊழியம் முடிவடைகிறது. தன்னுடைய அன்பான பிரயத்தனங்கள் விளங்கிக்கொண்டிருந்த ஸ்தலம் காலியாகிறது. தன் பட்சமான வார்த்தைகளால் தளர்ந்த காலங்களில் உற்சாகமும் ஆறுதலுமடைந்து வந்த ஜனங்களுக்கு அவ்வித அன்பு கிடைக்க ஏதுவற்றுப்போகிறது. குறைவு அனுபவித்தபோது சகாயம் பெற்று வந்த வீடுகளில் கிடைத்துவந்த நன்மைகள் வந்துசேரக் கூடாமற்போகிறது. தன்னை நேசிக்கும்படி பயிற்றப்பட்டுவந்த உள்ளங்களில் அவ்வித சாதுவான சிநேகத்தால் உண்டாகும் சக்தியும் நம்பிக்கையும்

தைரியமும் கிடைக்க ஏதுவில்லாமற்போகிறது. தன் பிரயோஜனத்தின் மத்தியில் ஒரு உத்தமர் மறமைக்குட்படுவதால் அவர் வசித்து வந்த ஊரின் ஜனங்களுக்குப் பலவித சகாய அனுகூலங்கள் முடிவு பெறுகின்றன. ஆனால் அவருடைய செல்வாக்கு நிலைநிற்கிறது.

மரித்துப்போன நம்முடையவர்கள் அடிக்கடி விட்டுப்போகும் செல்வாக்குக் கொஞ்சமல்ல. அவர்கள் முகம் நம்மைவிட்டு மறைந்து, அவர்கள் குரலோசை ஓய்ந்து, அவர்கள் கையிலிருந்து கிடைத்த நன்மைகள் தவறிப்போயின என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் நாம் நேசித்த பலரைக்குறித்து நாம் சொல்லக்கூடியது யாதெனில், மரணத்தின்பின் அவர்கள் நமக்காகச் செய்கிறதான காரியங்கள் அவர்கள் இன்னும் நம்மோடு ஜீவித்திருந்தால் செய்யக்கூடியதான கருமங்களை ஒத்த முக்கியத்தை யுடையது என்பதே.

(இன்னும் வரும்.)



WORK FOR CHRIST

கிறிஸ்துவுக்காக உழைத்தல்

கிறிஸ்து இங்கே இருப்பாரானால் நாம் பல காரியங்களை அவருக்காக நிறைவேற்றுவோம் என்று நாம் சொல்லலாம். அவரை நேசிக்கிற ஸ்திரீகள், கலிலேயா நாட்டின் ஸ்திரீகள் செய்ததுபோல சந்தோஷ

மாய் அவருக்குப் பணிவிடை நிறைவேற்றுவார்கள். அவருடைய சிநேகிதராயிருக்கிறவர்கள் அவருடைய ஏவல்படி அவருக்கு உதவியான எந்தக் காரியத்தையும் செய்ய முயல்வார்கள். அவரைப் பிரியப்படுத்தச் சிரமிக்கிற பாலியர்கள் அவருக்காக சமாச்சாரம் கொண்டுபோக ஓடிப்போவார்கள். அவர் திரும்ப இந்த உலகத்துக்கு வந்து நமது வீடுகளையெல்லாம் சந்திப்பாரானால் நமக்கு அவரைச் சேவிக்க எத்தனையோ ஆனந்தம் உண்டாகும் என்று நாம் எல்லாரும் சொல்லலாம். ஆனால் அவர் மனுஷவடிவமாய் இப்பூமியில் இல்லாவிட்டாலும் அவர் வாஸ்தவமாய் இங்கு பிரசன்னமாயிருப்பது போலவே அவருக்காக நாம் உழைக்கக்கூடும்.

இவ்வித ஊழியம் நிறைவேற்ற ஒரு வழி ஏதெனில், அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே. அவர் நமது ஆண்டவர். நம்முடைய கீழ்ப்படிதலான நடக்கையைப்போல வேறொன்றும் அவரைச் சந்தோஷப்படுத்துகிறதில்லை.

ஒருதடவை பேர்பெற்ற தத்துவசாஸ்திரி ஒருவரை சந்திக்கும்படி ஒரு சிநேகிதர் போயிருந்ததாகவும், அத்தருணம் சாஸ்திரியாருடைய மகள் வெளியே போயிருந்த தகப்பனார் வீட்டிற்கு வரும்வரையிலும் அந்தச் சிநேகிதரை உபசரித்துக்கொண்டிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சிநேகிதர், அந்தப் பெரிய ஞானியாரின் பிள்ளை மிகவும் ஆழ்ந்த வித்தை கற்றுவருகிறதாயிருக்கும் என்று யோசித்து, 'உன் தகப்பனார் உனக்கு என்ன கற்றுக்கொடுக்கிறார்?' என்று கேட்டார். பிள்ளை அவருடைய முகத்தைச் சற்றுநேரம் உற்றுப்பார்த்துவிட்டு, அது 'கீழ்ப்படிதல்' என்று பதில் சொல்லிற்று. நமது கர்த்தர் நமக்குக் கற்பிக்கிற பெரிய பாடம் கீழ்ப்படிதலே. அவர் நாம் கீழ்ப்படிதலைக் கற்கவேண்டும் என்று விரும்புகிறார். நாம் கீழ்ப்படிதல் உடையவர்களாய் இருப்போமேயானால் நாம் எப்போதும் அவருக்காக கிரியைசெய்கிறவர்களாய் இருப்போம். அன்பற்ற கீழ்ப்படிதல் அவருக்குச் சந்தோஷம் கொடுக்கிறதில்லை. எத்தனை சிறிய ஊழியமாயிருந்தாலும் அன்போடு நாம் செய்தால் அதை அவர் அங்கீகரிக்கிறார். அவ்விதமாய் நாம் வழக்கமாய் செய்துவருகிற வேலைகளையும் தேவதூதர் செய்கிற பரிசுத்த பணிவிடைகளைப்போல் தோன்றச் செய்யலாம்.

ஒரு சன்னியாசி மடத்தில் இருந்த சன்னியாசி ஒருவர் மடத்தின் சுவர்களில் இரத்தசாட்சிகள், பரிசுத்தவான்கள் முதலானோரின் சித்திரத்தையும், முள்முடி தரித்தவரான கிறிஸ்துவின் இன்பமுகபாவனையையும் வரைந்துவைத்தார். ஆனால் அதைப் பார்த்தவர்கள் அது சித்திரமன்று வெறும் வரைகள் என்று பரிகாசம் செய்தார்கள். ஒரு

இரவில் அச்சன்னியாசி தனக்குத் திராணிமாத்திரம் இருக்குமானல் நிபுணரான சித்திரக்காரர்போல் தான் நேசித்துக் கனப்படுத்துகிறவரான கிறிஸ்துவின் முள்முடிதரித்த சித்திரத்தை சிறப்பாய் வர்ணிக்கக்கூடுமென்றும், மனுஷரே எனது சித்திரத்தை இகழும்போது கர்த்தர் எப்படி அதை விரும்பக்கூடுமென்றும் தன்னுள்ளத்தில் சந்தேகப்பட்டு வரைந்த படங்களை எடுத்துத் தகனித்துவிடப் பிரயத்தனித்தார். இப்படி சிந்தித்துக்கொண்டு தன் அறைக்குள் நிற்கையில், ஒரு ஆள் முள்முடி தரித்தவராய் அவ்வறையில் வந்து நின்று, 'என்னைக்குறித்த அன்பினல் செய்யும் எந்த வேலையையும் நான் அற்பமாய் எண்ணுகிறதில்லை' என்று ஒரு மெல்லிய தொனியோடு அவரிடத்தில் பேசினதாகவும், அப்புறம் சுவரில் இருந்த சித்திரங்கள் உலகத்தில் இதற்குமுன் ஒருபோதும் இல்லாத பிரபையோடு சுவர்களில் அலங்காரமாய் காணப்பட்டதாகவும் சொல்லியிருக்கிறது.

இந்தக் கட்டுக்கதையில் ஒரு சிறந்த அர்த்தம் உண்டு. தம்மைக் குறித்த அன்போடு செய்யப்படுகிற ஒரு வேலையையாவது கிறிஸ்து அற்பமாய் எண்ணுகிறதில்லை. நம்மில் அநேகருக்கு நம்முடைய ஜீவியத்தில் பலவிதமான சிற்றூழியங்கள் உண்டு. இவைகளை எல்லாம் கிறிஸ்துவின்மேலுள்ள அன்பினல் ஏவப்பட்டுச் செய்வோமானல் அவை மகிமையாக விளங்கும்.

கிறிஸ்துவின் நாமத்தில் மற்றவர்களுக்காக எதைச் செய்கிறோமோ அது அவருக்காகவே செய்யப்படுகிறது. மத்தேயு 25-ல் 'மிகவும் சிறியவராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ' என்ற பதங்கள் நமக்கு ஞாபகமிருக்கலாம். ஒரு ரோகிக்கு அல்லது ஒரு ஏழைக்கு நம்முடைய சக்திக்குத்தக்கதாய் கர்த்தருக்காக என்றெண்ணி எந்த ஊழியத்தைச் செய்கிறோமோ அது தமக்கே செய்யப்பட்டதாக அவரால் அங்கீகரிக்கப்படுகிறது.

மார்க்கரீத் பிரெஸ்டன் (Margaret Preston) அம்மாள் தான் பாடின கவி ஒன்றில், கிறிஸ்துவுக்காக யாதொரு ஊழியமும் செய்யக்கூடாததினல் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த சோர்வுற்ற ஒரு ஸ்திரீயைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அவள் தாயினுடைய மரணப்படுக்கையில் தன் சின்னத் தங்கச்சியைப் பார்த்துக்கொள்வதாக வாக்குச் சொல்லியிருந்தாள். அந்தப் பிள்ளையைக் கவனிக்க வேண்டியிருந்ததினல் அவளுக்கு வேறே நன்முயற்சி ஒன்றும் செய்ய ஏதுவில்லாதிருந்தது. இங்ஙனம் அவள் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும்போது அச்சிறு சகோதரி ஒருநாள் நித்திரைவிட்டுத் திடீரென்று எழுந்து பின்வரும் நேர்த்தியான சொப்பனம் கண்ட

தாகச் சொன்னாள்: 'ராஜா தன் பிரஜைகள் யாவரும் தனக்கு ஒவ்வொரு வெகுமதி கொண்டுவரவேண்டும் என்று விளம்பரம் செய்திருந்தபடியினால் நீங்கள் துக்கத்தோடு அவர் சமுகத்தில் நின்றதாகவும், இவ்வளவு கவலை நிறைந்த கையிலே வெகுமதி கொள்ளுகிறதற்கு இடமில்லை என்று சொன்னதாகவும் கண்டேன். அரசன் அப்போது, "உன் கவலை யாது?" என்று வினவ, ஒரு பிள்ளைக்கு ஆகாரம் கொடுத்து வளர்க்கத்தான் கவலைப்படுகிறேன் என்று நீங்கள் சொன்னதையும் கேட்டேன். அப்போது அவர் மகாகாருணிய பார்வையோடு "அந்தக் குழந்தை என்னுடையது" என்று தாழ்ந்த குரலோடு சொன்னதையும் செவியுற்றேன். அவருடைய பார்வையானது என் நித்திரையைக் கலைத்துவிட்டது.'

இச்சிறு சொப்பனம் அநேகருக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கக்கூடியது. தங்கள் பிள்ளைகளை வளர்ப்பது கஷ்டம் என்று எண்ணுகிற அநேக தாய் தகப்பன்மார் உண்டு. குழந்தைகளுக்கு அன்ன வஸ்திராதிகள் சம்பாதித்து அவர்களை வளர்க்கிறதில் சமயம் முழுவதையும் போக்கடிக்கவேண்டியிருப்பதினால் தாங்கள் கிறிஸ்துவுக்காக ஒரு வேலையும் செய்யமுடியாதென்று அவர்கள் சொல்லலாம். ஆனால் இயேசு, 'அந்தக் குழந்தைகள் என்னுடையவைகள். அவர்களுக்காக நீங்கள் எதைச் செய்கிறீர்களோ அதை எனக்கே செய்கிறீர்கள்' என்று மெல்லிய குரலோடு சொல்லுகிறார்.

ஒரு வீட்டில் ரோகியான ஒரு ஆள் நிமித்தம் வருத்தம் இருக்கலாம். வீட்டிலுள்ள உடமஸ்தன் அந்த ஆளுக்காக முழு சமயத்தையும் நினைவையும் செலவழிக்கிறதாயிருக்கலாம். ஒருவேளை அந்த ரோகி வயசான தகப்பனாயிருக்கலாம். அல்லது நொண்டியாயோ, குருடாயோ, வியாதிபிடித்ததாயோ இருக்கும் ஒரு குழந்தையாயிருக்கலாம். அல்லது பெலங்குன்றின ஒரு சகோதரனாயிருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்காக இரவும் பகலும் அலுப்பான வேலைசெய்து நிறைவேற்றுவதினால் தங்கள் ஜீவியத்தில் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யக்கூடவில்லை என்று சிலர் விசாரப்படலாம். அவர்கள் தேவ ஊழியத்திற்காக ஆள் அவசியம் என்பதைக்குறித்துக் கேள்விப்பட்டும் தாங்கள் அதை நிவிர்த்திக்க ஏலாததையிட்டு விசாரப்படலாம். ஆனால் நீங்கள் பிரயாசமெடுத்து கவலையோடு நேரத்தையும் பெலத்தையும் செலவழித்து உதவிசெய்கிறவர்களான ஏழைகள் என்னுடையவர்கள் என்றும், இப்பேர்ப்பட்ட ஊழியத்தை நீங்கள் நிறைவேற்றுவது தூரஸ்தலங்களில் கவலையும் இடையூறுமின்றி பிரயாசப்படுகிற ஊழியர்களின் வேலையைப்போலவே அருமையானது என்றும் இயேசு மென்குரலோடு பேசுகிறார்.

சில சமயங்களில் இயேசுவுக்காக நாம் களங்கமற்ற அன்போடு செய்கிற வேலை பயன்படாமற்போகிறதுபோலக் காணப்படுகிறதுண்டு. ஜீவியகாலமெல்லாம் பிரயாசப்பட்டும் சித்தியில்லாமல் உழைக்கிற சில பக்திமான்களைக் காணலாம். இவ்விதமாய் கிறிஸ்துவுக்காகச் செய்கிற வேலையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லவேண்டியது. கிறிஸ்துவின் நாமத்தில் அவரிடத்தில் வைத்த அன்புடன் செய்யும் எந்த வேலையும் வீண்போகாது என்பது சத்தியம். நமது குறுகின புத்திக்குச் சில முயற்சிகள் சித்தியற்றதுபோலக் காணப்பட்டாலும், தேவனுடைய ஊழியம் தற்பிரதிஷ்டை செய்த உண்மையான ஜீவியத்தில் விளங்கிக்கொண்டிருக்கிறது. சீஷர்கள் மரியாள் சிந்தின விலைபெற்ற தைலம் விருதாவாய்ப் போனதென்றெண்ணினார்கள். அப்படி தோன்றியுமிருக்கலாம். ஆனால் வெளியில் கந்தம்வீச சிந்தப்பட்ட தைலத்தினால் உலகத்தில் முன்னைவிட இன்பம் உண்டாயிற்று என்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே செய்யப்படுகிற அநேக ஊழியத்தைக்குறித்தும், செலவழிக்கப்பட்ட ஜீவியத்தைக்குறித்தும் சொல்லவேண்டியதாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆம் பெப்ருவரி மீ

1	வெ.	மத்	7. 1—14	11	தி.	மத்.	11. 1—15	20	பு.	மத்.	14. 1—12
2	ச.	„	7. 15—29	12	செ	„	11. 16—30	21	வி.	„	14 13—23
3	ஞா.	„	8. 1—17	13	பு.	„	12. 1—13	22	வெ.	„	14 24—36
4	தி.	„	8. 18—34	14	வி.	„	12. 14—32	23	ச.	„	15. 1—14
5	செ.	„	9. 1—13	15	வெ	„	12 33—50	24	ஞா.	„	15. 15—28
6	பு	„	9. 14—26	16	ச.	„	13. 1—17	25	தி.	„	15. 29—39
7	வி.	„	9. 27—38	17	ஞா.	„	13. 18—30	26	செ.	„	16 1—12
8	வெ	„	10. 1—15	18	தி.	„	13. 31—48	27	பு.	„	16 13—28
9	ச.	„	10. 16—31	19	செ	„	13 44—58	28	வி.	„	17. 1—13
10	ஞா.	„	10 32—42								

C. L. S. PRESS, MADRAS—1918